**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 148/2016**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 15.09.2025 | தகப்பனார் பெயர்: | முருகையன் |
| பெயர்: | கலியமூர்த்தி<br>(PW– 1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | பண்டாரவடை | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 73/2025 |

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 15.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 15.44)**

1. நான் காவல் உதவி ஆய்வாளர் பணியில் இருந்து ஓய்வுபெற்றவர் என்றால் சரிதான். நான் ஓய்வு பெற்று 7 வருடங்கள் ஆகிறது. முதல் பிரதிவாதியின் கணவர்தான் 2ம் பிரதிவாதி காமராஜ் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி காவியா, 5ம் பிரதிவாதி விக்னேஷ், 6ம் பிரதிவாதி சூரியா ஆகியோர் 1, 2 பிரதிவாதிகளின் மகள் மற்றும் மகன்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் சீர்காழி தாலுக்கா வள்ளுவக்குடியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் உறவினர்கள் என்றால் இல்லை, ஆனால் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள்.

2. 3ம் பிரதிவாதி வேறு சமூகத்தை சேர்ந்தவரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் பழக்கம் கிடையாது, தெரிந்தவர் மட்டும்தான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி காமராஜ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு 1ம் பிரதிவாதி மற்றும் 4, 5, 6 பிரதிவாதிகள் அறந்தாங்கியில் குடியிருந்து வருகிறார்கள்

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி பிரகாஷ் ஏஜென்சியின் பார்ட்னராக இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்–174/1B, 174/3, 174/2 ஆகும்.

3. இந்த 3 சர்வே எண்ணில் தான் ஸ்ரீநகர் காலனி விரிவாக்கம்–II அமைந்துள்ளது என்றால் சரிதான். அதில் தாவா சொத்து என்பது எந்த மனை எண் என்றால் 47 ஆகும். தாவா சொத்தை முதல் பிரதிவாதி புஷ்பவள்ளி சரண்ராஜ் வகையறாவிடம் கடந்த 27.04.2011ல் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அவர் யாரிடம் வாங்கினார் என்று தெரியாது, ஆனால் கடந்த 27.04.2011 தேதியிட்ட ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது. தாவா சொத்தை முதல் பிரதிவாதி கடந்த 23.10.2013ல் என்னிடம் ரூ.5,00,000/– கடன் பெற்றுக்கொண்டு அதற்காக மேற்கண்ட கிரயப்பத்திரத்தின் அசலை என்னிடம் கொடுத்துவிட்டு பெந்தக அடமானக்கடன் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

4. அந்த பெந்தக அடமான கடன் பத்திரத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் இல்லை, நீதிமன்றத்தில் வழக்கில் உள்ளது. அந்த பெந்தக அடமான கடன் பத்திரத்தின் அசல் எந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த வழக்கு முதல் பிரதிவாதி புஷ்பவள்ளி மீது மட்டும்தான் தொடரப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த பெந்தக அடமான கடன் பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பெந்தக அடமான கடன் பத்திரம் பதிவு பெற்ற ஆவணமா என்றால் இல்லை. அந்த பெந்தக அடமான கடன் பத்திரம் என்பது ரூ.5,00,000/– அசலுக்கு வட்டிக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. அந்த அடமான கடன் பத்திரத்தில் சொத்து என்னிடம் வசம் ஒப்படைக்கப்பட்டது என்ற வாசகம் இல்லை என்றால் அவ்வாறு இருக்கிறது. நான் பெந்தக அடமான கடன் பத்திரத்தின் கீழ் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் பாரா 6 ல் 23.10.2013ல் ஏற்பட்ட பெந்தக அடமான கடன் பத்திரத்தின்படி அசல் தொகையை 3 மாத கெடுவிற்குள்

வட்டியுடன் திரும்ப கொடுத்துவிடுவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் பாரா 6 ல் முதல் பிரதிவாதி அந்த அடமான கடன் தொகை அல்லாமல் 12.12.2013ல் என்னிடமிருந்து ரூ. 1 லட்சம் மற்றும் 3 பவுன் (ரூ. 75,000/–) நகை கடன் பெற்றதாகவும் மொத்தமாக ரூ. 6,75,000/– தர வேண்டும், அதனால் சொத்தை என்னிடம் ஒப்படைத்ததாக கூறியுள்ளதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான், ஆனால் வாய்மொழியாக ஏற்பட்டது.

6. முதல் பிரதிவாதி எவ்வித அடமானமும் வைக்கவில்லை என்றாலும் எந்த கடனும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை கடந்த 02.05.2014 அன்று 1ம் பிரதிவாதி புஷ்பவள்ளி, 3ம் பிரதிவாதி சகோதரர் செந்தில் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. இதற்கு 2ம் பிரதிவாதியும் நானும் உடந்தையாக இருந்தோம் என்றால் சரியல்ல. இந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அதன்பிறகு 1, 2 பிரதிவாதிகள் துணையுடன் நான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 09.06.2016ல் சீர்காழி காவல் நிலையத்தில் 3ம் பிரதிவாதி சரவணன் என் மீதும், கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீதும் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

7. அதே 09.06.2016ல் சீர்காழி காவல் நிலையத்தில் 3ம் பிரதிவாதி பெயரில் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் காவல் துறையில் பணிபுரிந்த காரணத்தால் சீர்காழி காவல் நிலையத்தார் எனக்கு அனுகூலமாக நடந்து கொண்டதால் 3ம் பிரதிவாதி சரவணன் நாகப்பட்டினம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் 1, 2 பிரதிவாதிகள், கிருஷ்ணமூர்த்தி, எனக்கும் சம்மன் வந்தது என்றால் சரிதான், அந்த ஆவணம்

வா.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. அந்த நில அபகரிப்பு புகாரில் 1, 2 பிரதிவாதிகளுடன் நானும் சேர்ந்து 3ம் பிரதிவாதி சரவணனின் சகோதரரிடம் தாவா சொத்தை விற்றுவிட்டு அவரிடம் வீண் பிரச்சனை செய்ததால் எங்களை எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. அந்த நில அபகரிப்பு புகாரை விசாரித்த வேலுதேவி என்ற உதவி ஆய்வாளருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான், அந்த ஆவணம் வா.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. இந்த வழக்கில் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய மனு IA.678/2016 தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அந்த உத்தரவின்பேரில் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் C.M.A. 05/2018 தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த C.M.A. 05/2018 மீது நான் எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த C.M.A. 05/2018 ல் நான் முதல் பிரதிவாதி புஷ்பவள்ளி மீது OS. 157/2016 என்ற எண்ணில் மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் நானும் 1ம் பிரதிவாதியும் வஞ்சக கூட்டு செய்து அதில் தீர்ப்பு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

10. அந்த OS. 157/2016ல் 3ம் பிரதிவாதியும் அவரது சகோதரர் செந்திலும் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்று கூறவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி வாங்கிய ரூ. 5 லட்சத்திற்கு வட்டியுடன் பற்று (Charge) என்பதன் அடிப்படையில் தாவா சொத்தை ஏலத்திற்கு விட்டு அதன் அடிப்படையில் வசூல் செய்ய தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11. தாவா சொத்தின் வசம் இல்லாத காரணத்தால்தான் இந்த வழக்கை மறைத்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் OS.157/2016 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அந்த OS.157/2016 வழக்கை பற்றி நான் Reply statement எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு 3ம் பிரதிவாதியின் சகோதரர் செந்தில் மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் OS.282/2022 வழக்கை தாக்கல் செய்து OS.157/2016 வழக்கின் தீர்ப்பாணை செல்லாது  என்றும், தாவா சொத்து 3ம் பிரதிவாதியின் வசத்தில் உள்ளதால் அவரின் அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

12. அந்த வழக்கு அதிகார வரம்பு காரணமாக சீர்காழி சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு OS. 124/2023 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்திருக்கிறேன். நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்திருக்கிறேன் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில்தான் உள்ளது என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றி வேலி அமைக்கப்பட்டு கருங்கல் நடப்பட்டுள்ளது என்றால் நான் தான் வேலி வைத்துள்ளேன்,  அதில் கீற்றுக்கொட்டகை உள்ளது.

13. வேலியும் கருங்கல் நடப்பட்டதும் நான் செய்யவில்லை, 3ம் பிரதிவாதிதான் செய்தார் என்றால் சரியல்ல. தாவா இடத்தை சுற்றி நிறைய மனைப்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமான புகைப்படம் தான் தாவா இடத்தை காட்டக்கூடியது என் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.  அந்த புகைப்படத்தில் அனுபவத்தில் நான் இருந்திருந்தால் மனைக்கு உள்ளே சென்று புகைப்படம் எடுத்திருப்பேன், என்னிடம் அனுபவம் இல்லாததால்தான் வெளியே நின்று புகைப்படம் எடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் வேலி போட்டு அதன்

பூட்டுசாவி 3ம் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த காலத்திலும் என் வசத்தில் இல்லை என்றாலும் நானும் 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து 3ம் பிரதிவாதியிடம் அதிக பணம் பறிக்க வேண்டும் என்ற காரணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

14. 3ம் பிரதிவாதி சகோதரர் கிரயம் செய்யும்போது 1, 2 பிரதிவாதிகள் தாவாசொத்தின் அசல் கிரய ஆவணம் வங்கியில் உள்ளது என்று கூறியதால் அசல் ஆவணத்தை பெற முடியவில்லை என்றால் சரியல்ல. அந்த அசல் ஆவணத்தை திருப்பி தராமல் என்னை வைத்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கானது தள்ளுபடிக்கு அருகதையானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகள் எனது பாதுகாப்பில் வழக்கிற்காக வெளியூரில் இருக்கின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா 3ம் பிரதிவாதியின் சகோதரர் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 17.01)**